# புதுச்சேரி அரசு

## கலை, பண்பாட்டுத் துறை

# குடிமக்கள் / சார்ந்திருக்கிறவர்கள் சாசனம்

கலை, பண்பாட்டுத்துறை
எண். 1, ரோமன் ரோலண்டு வீதி,
புதுச்சேரி – 605 001.
மின்னஞ்சல் : art. pon@nic.in

இணையதளம் : http://art.puducherry.gov.in

# அட்டவணை


| வ. எண் | பொருள் | பக்க எண். |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 - 2 |
| 2. | திட்டங்களும், நிகழ்ச்சிகளும் | 3 - 4 |
| 3. | குறைகளைக் களைதல், உதவுதல், வழிகாட்டுதல் | 5 - 6 |
| 4. | நிறுவன அட்டவணை | 7 |
| 5. | கலை, பண்பாட்டுத் துறையின் திட்டங்கள் | 8 - 17 |
| 6. | ரோமன் ரோலண்டு நூலகம் கிளை நூலகங்களின் செயல்பாடுகள் | 18 - 20 |
| 7. | அருங்காட்சியங்கள் | 21 |
| 8. | கிளை நூலகங்களின் பட்டியல் | 22 -23 |
| 9. | மக்கள் தகவல் அதிகாரி, முதல் முறையீட்டு அதிகாரி பெயர், பதவி, மற்ற விவரங்கள் | 24 |

# இயல் 1

## 1. முகவுரை :

1992 இல் கல்வித்துறையிலிருந்து பிரிந்தெடுக்கப்பட்ட கலை, பண்பாட்டுத்துறை தனித்துவம் பெற்றது. பல்வேறு கலை வடிவங்களை மேம்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கோடும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பல்வேறு கலை வடிவங்களில் தொடர்புடைய / ஈடுபட்டுள்ள கலைஞர்களின் நிலையை மேம்படுத்தவும் கலை, பண்பாட்டுத் துறை உருவாக்கப்பட்டது.

## 2. கண்ணோட்டம்

கலை, பண்பாட்டுத்துறை நடைமுறைப்படுத்தும் பல்வேறு திட்டங்கள் பற்றிய புரிதலுணர்வை மக்களுக்கு ஏற்படுத்தவும் அவர்களுடைய குறைகளைக் களையும் வழிமுறைகளை அறியச் செய்யவும் குடிமக்கள் சாசனம் வெளியிடப்பட்டது. அவ்வப்போது தகவல்களை புதுப்பித்து மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.

## 3. நோக்கம் :

முன்னாள் பிரெஞ்சு காலனியில் கலை, பண்பாடு தொடர்பான பல பாரம்பரியங்கள் செழுமையான வழிவழி மரபினதாக உள்ளன. பிரெஞ்சு தொடர்பும் வரலாற்றுப் பாரம்பரியமும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளை மட்டுமல்லாது அயல்நாட்டு பயணிகளையும் ஈர்த்துள்ளன. தமிழ், தெலுங்கு, மலையாளப் பண்பாட்டுக் கலவையோடு அயல்நாட்டு பல பண்பாடுகளும் ஊடுருவியுள்ளன. பல்வேறு கலைகளையும் கலைஞர்களையும் ஊக்குவிக்கவும் பண்பாட்டுப் பாரம்பரியத்தை பல்வேறு பண்பாட்டு மதிப்பீடுகள் வழியாகப் பிரித்துக்காட்டி வலுப்படுத்தவும் அரசு தீவிர முயற்சி எடுத்துள்ளது.

## 4. செயல்பாடுகள் :

துறையின் தலையாய செயல்பாடுகளுள் முதலாவது புதிய நூலகங்கள், படிப்பகங்களை நிறுவுதலும், இயங்கும் நூலகங்களை மேம்படுத்துதலும் பொதுமக்களின் இலக்கிய மற்றும் படிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தலுமாகும். இந்த நோக்கங்களை அடைவதற்கு ரோமன் ரோலண்டு நூலகம் மற்றும் 80 கிளை நூலகங்கள், பாரதியார், பாரதிதாசன், சுப்பையா, புதுச்சேரி அருங்காட்சியகம் உள்ளிட்டவைகளை நிர்வகித்து வருகிறது. தன்னாட்சி

நிறுவனங்களான பாரதியார் பல்கலைக்கூடம், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களுக்கு மானிய உதவி அளித்து வருகிறது. தகுதிமிக்க சிறந்தோங்கிய பல்துறைக் கலைஞர்களின் இலக்கிய ஆய்வு உள்ளிட்டப் பணிகளை ஊக்குவிக்க விருதுகளும், மதிப்பூதியமும் வழங்கப்படுகிறது. நிகழ்கலைகளை நிகழ்த்தும் அறிஞர்கள் / கலைஞர்களின் வாழ்க்கைப் பொருளாதாரத்தை உயர்த்த நிதியுதவி அளிக்கப்படுகிறது. ஆவணக் காப்பகத்தை வலுப்படுத்த இத்துறையானது பல்வேறு ஆவணங்களை / வெளியீடுகளைப் பாதுகாத்து வருகிறது. பெருங்கவிஞர்கள் தலைவர்கள் நினைவைப் போற்ற பல்வேறு கலை வடிவங்களில் ஏராளமான விழாக்களும் பயிலரங்குகளும் வெற்றிகரமாக நடத்தப்படுகின்றன.

தன்னார்வல பண்பாட்டு நிறுவனங்களின் செயல்பாட்டுக் நிதியுதவி அளிக்கப்படுகிறது. கலை, பண்பாட்டுத்துறையில் உயர்கல்வியைத் தொடரும் ஆராய்ச்சி அறிஞர்களுக்கு மானியம் அளிக்கப்படுகிறது. கையெழுத்துப் படிகளை வெளியிடவும் விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் நன்கறிந்த கவிஞர்களின் வாழ்க்கை வரலாற்றை ஆவணப்படமாக்கவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. தென்கைப் பண்பாட்டு மையத்தோடு இணைந்து ஒவ்வோராண்டும் இத்துறையானது புதுச்சேரி கலைவிழாவை நடத்துகிறது. பொதுவாகக் கலை, பண்பாட்டுத் இயக்குநரகம், பொதுமக்கள், வரலாற்றை, பாரம்பரியத்தை, பாரதியார், பாரதிதாசன் போன்ற பெருங்கவிஞர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிய உதவும் ஏணியாகச் செயல்படுகிறது.

இயல் - 2

# திட்டங்கள் / நிகழ்ச்சிகள்

## 1. ஆட்சி மொழி மேம்பாடு :

அலுவலகக் காரணங்களுக்காக வட்டார மொழிகளான தமிழ், மலையாளம், மற்றும் தெலுங்கு ஆகியவற்றை அறிமுகப்படுத்துதல், கருத்தரங்குகள் பயிற்சி வகுப்புகள், விழாக்கள் நடத்தி எழுத்தாளர்களுக்கு முறையே தமிழ்மாமணி, புதுவைக் கலைமாமணி, தெலுங்கு ரத்னா, மலையாள ரத்னா, கம்பன் புகழ் இலக்கியப் பரிசு, தொல்காப்பியர் விருது, நேரு குழந்தைகள் இலக்கியப் பரிசு ஆகியவற்றை வழங்கி அவர்களைச் சிறப்பு செய்வதோடு இலக்கிய விழாக்கள் நடத்துகிறது.

## 2. எழுத்து, கலை மற்றும் நிகழ்காட்சிக் கலைகளில் சிறப்புற்று விளங்குவர்களுக்கு நிதியுதவி :

ஆண்டு வருமானம் ரூ. 24,000/- க்கும் மிகுதிப்படாமலும், 50 க்கும் குறையாத வயதும் உடைய நலிவுற்ற கலைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 1000/- நிதியுதவி அளிக்கப்படுகிறது. ஆண்டு வருமானம் ரூ. 24,000/-- க்கும் மிகுதிப்படாமலும், 58 க்கும் குறையாத வயதும் உடைய நலிவுற்ற தமிழறிஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 1500/- நிதியுதவி அளிக்கப்படுகிறது.

## 3. நூலக மேம்பாடு :

கலை, பண்பாட்டு இயக்கத்தின் கீழ் ரோமன் ரோலண்டு நூலகமும் 80 கிளை நூலகங்களும் இயங்குகின்றன. பொது நூலகங்கள், கிளை நூலகங்கள் மற்றும் படிப்பகங்களைப் பராமரித்தல், தற்போதுள்ள நூலகங்களை மேம்படுத்துதல் ஆகியவற்றை இத்துறை செய்து வருகிறது.

## 4. அருங்காட்சியக மேம்பாடு :

புதுச்சேரி அருங்காட்சியகம், மகாகவி பாரதியார், பாவேந்தர் பாரதிதாசன், மக்கள் தலைவர் திரு. வ. சுப்பையா நினைவகங்களை நிறுவி அவற்றைப் பராமரிப்பதற்கான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுதல்.

5. **‘இன்டாக்’ நிறுவனத்திற்கு நிதியுதவி :**

புதுச்சேரியில் எஞ்சியுள்ள தனித்தன்மை வாய்ந்த கட்டடக் கலையின் பழமையினைப் பாதுகாப்பதற்காக ‘இன்டாக்’ நிறுவனத்திற்குத் தேவையான நிதியுதவி அளித்தல்.

6. **அரசு ஆவணங்களைப் பாதுகாத்தல் :**

புதுச்சேரி ஆவணக்காப்பகத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அனைத்து ஆவணங்களும் பாதுகாக்கப்படுகின்றன. பல்வேறு துறைகளில் 1954 ஆம் ஆண்டு முதலான பதிவேடுகள் /ஆவணங்கள் திரட்டப்பட்டு ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

7. **இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை நிதி பங்களிப்பு :**

இராஜாராம் மோகன்ராய நூலக அறக்கட்டளை அளிக்கும் மானியத்திற்கு இணையான மானியததை அளிப்பதன் மூலம் புதுச்சேரி பகுதிக்கு வெளியிலிருந்து தேவைப்படும் நிதி சார்ந்த பயனைப் பெற்றுத் தருகிறது.

8. **கலாச்சார செயல்பாடுகளை நிறுவுதல் மற்றும் மேம்படுத்துதல் தன்னார்வல கலாச்சார நிறுவனங்கள் + SCSP. க்கு நிதியுதவி அளித்தல் :**

நமது நாட்டின் பல்வேறு வகையான செவ்வியல் / நாட்டுப்புறக் கலைவடிவங்களைப் பாதுகாத்தல் / மற்றும் மேம்படுத்துதல். பிற மாநிலம் / நாடுகளுக்குக் கலைஞர்களை அனுப்புவதோடு உள்ளூர் கலைஞர்கள் மற்றும் வெளி மாநிலக் கலைஞர்களைக் கொண்டு பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்துவதன் மூலம் மக்களிடையே கலாச்சாரம் பாரம்பரியத்தைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல். புகழ்பெற்ற கலைஞர்களுக்கு விருதுகள், பட்டங்களை வழங்கிக் கௌரவித்தல். பழமையான பாரம்பரிய கலைகளை வழங்கும் கலைக்குழுக்கள் கலைஞர்களை ஊக்கப்படுத்துவது இதன் நோக்கமாகும்.

# இயல் 3

## குறைகளைக் களைதல், உதவுதல், வழிகாட்டுதல்

திட்டங்கள் மற்றும் விண்ணப்பம் தொடர்பான மேலும் விவரங்களைப் பெறுவதற்குக் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரிகள்.

பின்வருமாறு :

(அ) இயக்குநர்,

கலை, பண்பாட்டுத்துறை,

1. ரோமன் ரோலண்டு வீதி,

புதுச்சேரி – 1.

தொலைப்பேசி எண். 0413 – 2336203 மற்றும் 0413 – 2349716

மின்னஞ்சல் : art. pon @ nic.in

(ஆ) உதவி நூலகத்தகவல் அதிகாரி,

கலை, பண்பாட்டுத்துறை

1. ரோமன் ரோலண்டு வீதி,

புதுச்சேரி – 1.

தொலைப்பேசி எண். 0413 – 2336203 மற்றும் 0413 – 2349716

(இ) கண்காணிப்பாளர் திட்டப்பரிவு,

கலை, பண்பாட்டுத்துறை

1. ரோமன் ரோலண்டு வீதி,

புதுச்சேரி – 1.

தொலைப்பேசி எண். 0413 – 2336203 மற்றும் 0413 – 2349716

(ஈ) உதவி நூலகத் தகவல் அதிகாரி,

93, மஸ்தான் பள்ளி வீதி,

காரைக்கால் - 609 602.

தொலைப்பேசி எண். 04368 – 221472

(உ) நூலகத் தகவல் உதவியாளர்,

அரசு பொது நூலகம்,

மாஹே - 673 310.

தொலைப்பேசி எண். 0490 – 2332222.

(ஊ) நூலகத்தகவல் உதவியாளர்,

அரசு பொது நூலகம்,

உயர்நிலைப்பள்ளி தெரு,

ஏனாம் - 533 464

தொலைப்பேசி எண். 0884-2321243

## 6. குறைகளைக்களைதல் :

பொதுமக்கள் தங்களின் குறைகள் / முறையீடுகள் கருத்துக்களை தீர்ப்பதற்காக கலை, பண்பாட்டுத் துறையின் உதவி நூலகத் தகவல் அதிகாரியை அனைத்து வேலை நாள்களிலும் தொடர்பு கொள்ளலாம். அனைத்து செவ்வாய் மற்றும் வியாழக்கிழமைகளில் காலை 10.00 மணிமுதல் நண்பகல் 12.00 மணிவரை இயக்குநரையும் தொடர்பு கொள்ளலாம்.

வெளிப்புறப் பகுதிகளில் கலை, பண்பாட்டுத் துறையின் பொறுப்பு அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம்.

தேவைப்படின் முறையீட்டினைத் தெரிவிப்பதற்கு அந்தந்தப் பகுதி செயல் அலுவலர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

## இயல் 4

# நிர்வாக அட்டவணை



## இயல் 5

## கலை, பண்பாட்டுத் துறையின் திட்டங்கள்

## அட்டவணை - 1

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பயன்கள் | வயது வரம்பு | ஆண்டு வருமானம் | பிற வரையறைகள் |
|---|---|---|---|---|---|
| | **அலுவல் மொழி மற்றும் மொழியியல் ஆய்வு மேம்பாடு** | | | | |
| அ. | தமிழ்மாமணி, தெலுங்கு ரத்னா, மலையாள ரத்னா விருது வழங்கல் | தமிழ்மாமணி 6 விருதுகள் மலையாள ரத்னா – 4 விருதுகள் தெலுங்கு ரத்னா - 4 விருதுகள் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விருதும் ரூ. 75,000 /- பெறுமானமுள்ளது. | 60 வயதிற்கு மேற்பட்டது | ------ | i. இந்த விருதாளர் மிக உயர்ந்த நிலையில் கவிதை, உரைநடை தொடர்பான நூல்களை வெளியிட்டிருப்பதோடு, வேண்டும். மற்றும் இலக்கியம் மற்றும் ஆராய்ச்சியில் பங்கு பெற்றிருக்க வேண்டும்.<br>ii. விருதாளர் பிற அரசு மற்றும் நிறுவனங்கள் பல்கலைக்கழகம் போன்ற அளித்த விருதினைப் பெற்றிருக்கக் கூடாது.<br>iii. விருதாளர் புதுச்சேரியைச் சேர்ந்தவராகவோ அல்லது விருதுக்கு தேர்ந்தெடுக்கப்படும் தேதிக்கு முன்னதாகத் தொடர்ச்சியாகப் புதுச்சேரியில் வசிப்பவராகவோ இருக்க வேண்டும்.<br>iv. அனைத்து வரையறைகளும் நிறைவடைந்திருந்தால் வயது மற்றும் புதுச்சேரியில் நீண்டகாலம் வசித்ததன் அடிப்படையில் முன்னுரிமை வழங்கப்படும். |
| ஆ. | புதுவை கலைமாமணி விருது | கலைமாமணி விருது – 30 விருதுகள் (இயல், இசை, நடனம், ஓவியம் மற்றும் நாட்டுப்புறக் கலைகள், நாடகம் உள்ளிட்ட துறைகள்) மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விருதும் ரூ. 50,000 /- பெறுமானமுள்ளது. | 30 க்கும் மேற்பட்டது வயது | ------ | |

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பயன்கள் | வயது வரம்பு | ஆண்டு வருமானம் | பிற வரையறைகள் |
|---|---|---|---|---|---|
| இ. | நேரு குழந்தைகள் இலக்கியப் பரிசு | 10,000/- ரூபாய் பெறுமானமுள்ள பணமுடிப்பு. விருதுகளின் எண்ணிக்கை – 2 விருதுகள் | ------ | ------ | ஒவ்வோர் ஆண்டும் தமிழில் வெளியிடப்படும் குழந்தை இலக்கிய நூல்கள் நேரு குழந்தை இலக்கியப் பரிசுக்கு உரியனவாகக் கருதப்படும். நூலாசிரியர் எழுத்தாளர் புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்தவராகவோ அல்லது புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் குறைந்தது ஐந்தாண்டுகள் வசித்து வருபவராகவோ இருக்க வேண்டும் |
| ஈ. | தொல்காப்பியர் விருது | ரூ. 10,000/- பெறுமானமுள்ள பணமுடிப்பு விருதுகள் எண்ணிக்கை - 2 | ----- | ----- | தமிழ்இலக்கியத்தில் சிறந்த ஆராய்ச்சி நூல். பிறப்பால் (அ) குடியுரிமையால் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சோந்தவராக உள்ள அனைத்து எழுத்தாளர்கள் மற்றும் நூலாசிரியர்கள் வயது வரம்பின்றி இத்திட்டத்தில் பங்கு கொள்ளலாம்.<br><br>இத்திட்டத்திற்காக புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் பிறந்தவராகவோ அல்லது 7 ஆண்டுகளுக்குக் குறையாமல் தொடர்ந்து வசிப்பவராகவோ இருப்பவர்கள் (விண்ணப்பம் அளித்த நாளுக்கு முன்பாக) புதுச்சேரியைச்சேர்ந்தவராகக் கருதப்படுவர். |
| உ. | கம்பன் புகழ் இலக்கிய விருது | ரூ. 10,000 விருதுகளின் எண்ணிக்கை – 10, தமிழில் உள்ள நாவல், சிறுகதை, நாடகம் கவிதை மற்றும் கட்டுரை பிரிவுகள் | ----- | ----- | 1. சிறந்த, நாவல், சிறுகதை, நாடகம், கவிதை மற்றும் புதினம், கட்டுரை.<br>2. நூலின் முதற்பதிப்பு விருதுக்கு முந்தைய ஆண்டில் (அதாவது ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை) வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.<br>3. அவரது சொந்த படைப்பு இலக்கியமாக வெளியீடு அமைய வேண்டும்.<br>4. நூலானது பிறநூல் (அ) பொழிப்பின் சுருக்கமாகவோ (அ) மொழிப்பெயர்ப்பாகவோ இருக்கக்கூடாது.<br>5. பல்கலைக் கழகப் பட்டம் அல்லது தேர்வுக்காக அளிக்கப்படும் இலக்கியத் திறனாய்வு / ஆய்வேடுகள் விருதுக்குத் தகுதியானவையல்ல. ஒரு முறை விருது பெற்ற எழுத்தாளர் அடுத்த நான்காண்டு தொடர்ந்து போட்டியில் பங்கு பெற இயலாது |

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பயன்கள் | வயது வரம்பு | ஆண்டு வருமானம் | பிற வரையறைகள் |
|---|---|---|---|---|---|
| | **<u>இலக்கியம், கலை, நிகழ்கலைகளில் சிறப்புற்று விளங்குபவர்களுக்கு நிதியதி</u>** | | | | |
| அ. | நலிவுற்ற கலைஞர்களுக்கான நிதியுதவி. | மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 /- | 50 வயதிற்கு மேற்பட்டவர் | ரூ. 24,000/-க்கும் குறைவான வருவாய் | 1. சிறப்பான முறையில் இசை, நடனம், நாடகம், நாட்டுப்புறக்கலையை வழங்கும் நபர் இத்திட்டத்தின்கீழ் பரிசினைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்.<br><br>2. விண்ணப்பதாரர் எந்தவொரு அமைப்பிலிருந்தும் எவ்வித நிதியுதவியைப் பெறுபவராக இருக்கக்கூடாது.<br><br>3. விண்ணப்பதாரர் பிறப்பாலோ (அ) குடியிருப்பாலோ புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.<br><br>4. விண்ணப்பதாரரின் மறைவிற்குப் பின்னர் அவருடைய மனைவியோ, பிள்ளைகளோ இந்த நிதியுதவியைப் பெறுதற்குத் தகுதி உடையவர்கள். |
| ஆ. | நலிவுற்ற தமிழறிஞர்களுக்கான நிதியுதவி. | மாதம் ஒன்றுக்கு ரூ. 1,500/- | 58 வயதிற்கு மேற்பட்டவர் | விண்ணப்பதாரரின் தனிப்பட்ட வருமானம் மாதம் ஒன்றுக்கு ரூ. 1,500/-க்கு மிகாமல் இருக்க வேண்டும். | 1. தமிழ்மொழி மற்றும் இலக்கியத்திற்குச் சிறப்பாகத் தொண்டாற்றும் நபர் இத்திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுவதற்குத் தகுதியுடையவர். |

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பயன்கள் | வயது வரம்பு | ஆண்டு வருமானம் | பிற வரையறைகள் |
|---|---|---|---|---|---|
| அ. | <u>புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் உள்ள நூலகங்கள் / ஆவணக்காப்பகங்கள் மற்றும் மேம்பாடு</u><br><br>புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் படிப்பக இயக்கம் நிறுவும் திட்டம் | எந்த தன்னார்வல அமைப்பும் பெண்கள் சங்கமும், இளைஞர் குழுக்களும், கிராம கல்விக் குழுவும், நூலக வட்டாரங்களும், பதிவு பெற்ற (அ) பதிவு பெறாத அமைப்புகளும்) பொதுமக்கள் பயன்பாட்டிற்கும் சிறிய படிப்பகம் நிறுவ தகுதியுடையவராவர். | ----- | ----- | தன்னார்வல அமைப்பும் பெண்கள் சங்கமும், இளைஞர் குழுக்களும், கிராம கல்விக் குழுவும், நூலக வட்டாரங்களும், பதிவு பெற்ற (அ) பதிவு பெறாத அமைப்புகளும் அரசியல் தொடர்பற்ற மதம் சாராத வணிக நோக்கமற்ற அமைப்பாகவும், படிப்பகம் நிறுவ வாடகை இல்லாத இடத்தைத் தருபவராகவும் இருத்தல் வேண்டும். அதன் மேம்பாட்டுக்காகவும் படிப்பகத்தை நடத்தவும் நிதி கோரலாம். |
| அ. | <u>அருங்காட்சியகம் / ஆராய்ச்சி மையம் மேம்பாடு :</u> | தற்போதுள்ள அருங்காட்சியகங்களை மேம்படுத்துதல் / பாதுகாத்தல் தொல்லியல் பொருள்கள் / பழமையானவைகளைத் திரட்டி பாதுகாத்து அருங்காட்சியத்தில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். கவிஞர் பாரதியார் / கவிஞர் பாரதிதாசன் நற்பெயரிலான முனைவர் பட்ட ஆய்வு நிதியுதவி வழங்குதல் | ----- | ----- | ஆராய்ச்சியாளர்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | **<u>கலாச்சார நடவடிக்கைகள் நிறுவுதல் மற்றும் மேம்பாடு / தன்னார்வல கலாச்சார அமைப்புகளுக்கு நிதியுதவி அட்டவணை இனத்தவருக்கான சிறப்பு மானியம்</u>**<br><br>புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் கலாச்சாரப் பணிகளை மேற்கொள்ளுதல் தன்னார்வல கலாச்சார அமைப்புகளின் மேம்பாட்டுக்கான நிதியுதவி | பராமரிப்பு கொடை ரூ. 3000 கலாச்சார நடவடிக்கைகள் ரூ. 5,000 | | | 1. கலாச்கார அமைப்புகள் நிதியுதிக்கு விண்ணப்பம் அளிக்கும் நாளுக்கு முன்னதாக இரண்டாண்டுகள் கலாச்சார செயல்பாடுகளில் ஈடுபட்டிருக்க வேண்டும்.<br><br>2. இந்த அமைப்பினுடைய நோக்கங்களுக்கும் சட்டதிட்டங்களுக்கும் ஏற்ப தகுதி வாய்ந்த நபர்களால் இதனுடைய கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.<br><br>3. இது தனிநபர் அல்லது தனிநபர் அமைப்பின் லாபத்திற்காக செயல்படக்கூடாது.<br><br>4. இந்த நிறுவனங்கள் முந்தைய நாளில் வழங்கிய பயனீட்டுச் சான்றிதழ் குற்றமிருப்பின் அது நிதியுதவி பெறுவதற்குத் தகுதியுடையதன்று. |
| ஆ. | நடனம் மற்றும் நாடகக் குழுக்கள் அமைப்புகளுக்கான நிதியுதவி வழங்கும் திட்டம் | ஒவ்வொரு நிகழ்வுக்கான நிதியுதவி ரூ. 2,000 /- க்கு மேற்படாதது. | ----- | ----- | 1. புதிய செவ்வியல் (அ) நாட்டுப்புற நடனம் நிகழ்ச்சிகளை வழங்கும் நாட்டியம் மற்றும் நாடகக்குழுக்கள் அல்லது புதிய நாடகங்களை நடித்து மேடையேற்றும் யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த பதிவு பெற்ற கலை அமைப்புகளுக்கு நிதியுதவி ஏற்புடையதாகும்.<br>2. முழு (அ) நிறுவனம் குறைந்தபட்சம் இரண்டாண்டுகள் செயல்பாட்டில் இருந்திருக்க வேண்டும்.<br>3. நடனத்தின் கரு (அ) கதை மற்றும் நாடகத்தின் உரையாடல் புதியதாகவும் கலைஞரின் மூலப்படைப்பாகவும் இருக்கவேண்டும், அவர் பிறப்பாலோ (அ) குடியிருப்பாலோ புதுச்சேரி மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். |

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பயன்கள் | வயது வரம்பு | ஆண்டு வருமானம் | பிற வரையறைகள் |
|---|---|---|---|---|---|
| இ. | மாநாடுகள் கருத்தரங்குகள் கண்காட்சி, விழா, போட்டிகள் இன்ன பிறவற்றை நிகழ்த்தும் கலை நிறுவனங்களுக்கு நிதியுதவி | ஆண்டொன்றுக்கு ரூ.10,000/- | ----- | ----- | 1. நிதியுதவிக்கு விண்ணப்பிக்கும் நிறுவனம் குறைந்தபட்சம் இரண்டாண்டுகள் அந்தத் துறையில் செயல்பட்டிருக்க வேண்டும்.<br>2. இத்திட்டத்தின் கீழ் கருத்தரங்குகள் / கருத்துக் கோவை, இன்ன பிறவற்றை நடத்தும் நிறுவனம் / அமைப்பானது அரசின் முன்னனுமதி பெறாமல் வெளிநாட்டு விருந்தினர்களை அழைக்கக் கூடாது. |
| ஈ. | கையெழுத்துப்படிகள் ஆராய்ச்சி இதழ்களை வெளியிடுவதற்கான நிதியுதவி திட்டம் | ரூ. 10,000/ - | ----- | ----- | 1. வெளியிடவிருக்கும் புத்தகம் / இதழ் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கலைப் பிரிவுகளான அதாவது மொழி, இலக்கியம், தத்துவம், சமயம், வரலாறு, இசை, நடனம், நாடகம் மற்றும் பிற நுண்கலை இன்ன பிறவற்றைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும்.<br>2. தமிழ், மலையாளம், தெலுங்கு, ஆங்கிலம், பிரெஞ்சு மொழியைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும்.<br>3. ஆராய்ச்சிப் பணிகளான ஆய்வேடு, விளக்கவுரை அல்லது தனிப்பட்ட ஆராய்ச்சி மற்றும் திறனாய்வு (எந்த வித பட்டத்திற்கும் அளிக்கப்படாதது) அடிப்படையாகச் கொண்ட மூலப்படைப்புகள் ஆராய்ச்சிக்காக ஏற்றுக் கொள்ளப்படும்.<br>4. நாவல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. |

| வ.எண் | திட்டத்தின் பெயர் | பயன்கள் | வயது வரம்பு | ஆண்டு வருமானம் | பிற வரையறைகள் |
|---|---|---|---|---|---|
| உ. | ஆராய்ச்சி அறிஞர்களுக்கு உயர்கல்வி மேற்கொள்ளவும் கலை, பண்பாடு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும் நிதி நல்கும் சிறப்புத் திட்டம். | மொழி, இலக்கியம், வரலாறு இசை, நடனம், நாடகம், நுண்கலை உள்ளிட்ட பொருள்களில் ஆய்வுப் பணி மேற்கொள்ளும் முழு நேர ஆராய்ச்சியாளர்களுக்கு 2 ஆண்டு காலங்களுக்கு நிதியுதவி வழங்கப்படும் | 35 வயதிற்குக் கீழ் | ----- | 1. இந்த ஆராய்ச்சி தகுதியுடைய பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றிருப்பதோடு 35 வயதிற்குக் குறைவு படாதவராக இருக்க வேண்டம்.<br>2. இந்த ஆராய்ச்சி அரசு அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகம் நிறுவனம் மூலம் அரசு அங்கீகரிக்கும் சிறந்த அறிஞர்களின் வழிகாட்டுதலோடு மொழி, இலக்கியம், வரலாறு, இசை, நடனம், நாடகம், நுண்கலை உள்ளிட்ட ஆய்வுப் பொருளில் ஆய்வு மேற்கொள்ள வேண்டும்.<br>3. இந்த ஆய்வு தமிழ், தெலுங்கு, மலையாளம், பிரெஞ்சு (அ) ஆங்கிலம் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றில் இருக்க வேண்டும்.<br>4. விதிவிலக்கப்பட்ட காரியத்தில் காலவரையறையானது மேலும் ஓராண்டுக்கு நீட்டிக்கப்படும்.<br>5. தொடர்புடைய பல்கலைக்கழகம் நிறுவனத்தின் வழியாக துறை சார்ந்த அறிஞர்கள் பரிந்துரைப்போர் இவ்வுதவி பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.<br>6. ஆராய்ச்சியாளர்களின் செயல்பாட்டின் அடிப்படையில் ஒவ்வோராண்டும் இந்த உதவித்தொகை புதுப்பிக்கப்படும். செயல்பாடு திருப்தி அளிக்கவில்லை என்றால் உதவி நிறுத்தப்படும். |
| ஊ. | **திறந்தவெளி பண்பாட்டு நடவடிக்கை** | ரூ. 3,500 /- | ----- | ----- | தெருக்கூத்து ,பொம்மலாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம் இன்னபிற கலைஞர்கள். |

# அட்டவணை 2

| வ. எண் | திட்டங்களின் பெயர் | மத்திய / மாநில | திட்டங்களின் விவரம் | இலக்கு பிரிவு | அளிக்கப்படும் பயன்பாடு |
|---|---|---|---|---|---|
| 1. | ஆட்சிமொழி மேம்பாடு | மாநிலம் | <u>பிறந்தநாள் போன்ற பல்வேறு விழாக்கள்</u><br>1. கவிஞர் வாணிதாசன்<br>2. கவிஞர் தமிழ்ஒளி<br>3. கவிஞர் புதுவைச்சிவம்<br>4. திருவள்ளுவர் விழா<br>5. குடியரசு தினம் - அலங்கார வண்டி<br><br><u>பல்வேறு விருதுகள் வழங்கல் :</u><br>✶ மலையாள ரத்னா<br>✶ தெலுங்கு ரத்னா<br>✶ தமிழ்மாமணி<br>✶ புதுவை கலைமாமணி<br>✶ விருது பெற்றவர்களுக்கு மதிப்பூதியம்<br>✶ தொல்காப்பிய விருது<br>✶ நேரு குழந்தைகள் இலக்கியப் பரிசு<br>✶ கம்பன் புகழ் இலக்கியப் பரிசு<br><br>1. அலுவலக நடவடிக்கைகளுக்காக வட்டரா மொழிகளான தமிழ், மலையாளம் மற்றும் தெலுங்கு ஆகியவற்றை அறிமுகப்படுத்துதல்.<br><br>2. கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள். விழாக்களை நடத்துதல் பல்வேறு விருதுகளை வழங்குவதன் மூலம் எழுத்தாளர்களைச் சிறப்பித்தல் - இன்னும்பிற<br><br>3. அதிகப்படியான வளர்ச்சி நடவடிக்கைகளால் ஏற்பட்டுள்ள பணிச்சுமையை ஈடுகட்டும் விதமாக கலை பண்பாட்டுத் துறையை வலுப்படுத்துதல். இதற்காக பணியிடங்கள் நிரப்பப்படும். புதிய பணியிடங்கள் உருவாக்கப்படும். | அறிஞர்கள் / கலைஞர்கள் | கலைஞர்களுக்கு நிதி உதவி |

| வ. எண் | திட்டங்களின் பெயர் | மத்திய / மாநில | திட்டங்களின் விவரம் | இலக்கு பிரிவு | அளிக்கப்படும் பயன்பாடு |
|---|---|---|---|---|---|
| 2. | புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் பாரதியார் பல்கலைக் கூடத்திற்கு மானிய நிதியுதவி அளித்தல் | மாநிலம் | பாரதியார் பல்கலைக்கூடம் ஒரு பல்துறை கலைக்கூடமாகும். பாரம்பரிய கலை / பண்பாட்டு வடிவங்களை பாதுகாத்தலும், செழுமைப்படுத்தலும் நோக்கமாகக் கொண்டது மானிய உதவி பெறுகிறது. நடனம், இசை, கவின் கலைகள் உள்ளிட்ட பல கலைகளில் இளங்கலை மற்றும் முதுகலைவரை கல்வி அளிப்பதற்காக ஒவ்வோராண்டும் பாரதியார் பல்கலைக் கூடத்திற்கு மானிய உதவி அளிக்கப்படுகிறது.<br><br>புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் மொழியியல் ஆய்வுகள். இனவியல் ஆய்வுகளுக்கான ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்ளவும் கருத்தரங்குகள். பயிலரங்குகளை நடத்தி பயிற்சி அளித்து ஆராய்ச்சி வெளியீடுகளை வெளிக்கொணரவும் மொழிச் சோதனைக் கூடம் நிறுவவும் பண்பாட்டு அருங்காட்சியகங்கள் நிறுவவும் மானிய உதவி பெறுகிறது. | மாணவர்கள் / ஆராய்ச்சியாளர்கள் | நிதி உதவி |
| 3. | இயல், கலை, மற்றும் நிகழ்கலைகளில் சிறந்தவர்களுக்கு நிதியுதவி அளித்தல். | மாநிலம் | நலிந்த நிலையில் உள்ள கலைஞர்களுக்கு அவர்களின் நிலுவையை தீர்க்கவும், வயது முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு மாதநிதி நல்கவும் இத்திட்டம் வகைசெய்கிறது. வருட வருமானம் ரூ. 24,000/-க்கு மிகாமலும் 58 வயதிற்கும் மேற்பட்டும் உள்ள நலிந்த தமிழறிஞர்களுக்கு நிதியுதவியாக ரூ. 1,500/- அளிக்கப்படும். நலிந்த நிலையில் உள்ள கலைஞர்களுக்கு மாத உதவியாக ரூ. 1,000/- வழங்கப்படும். | நலியுற்ற நிலையின் கீழ் உள்ள கலைஞர்கள் | நிதி உதவி |
| 4. | இன்டாக் நிறுவனத்திற்கு நிதியுதவி | மாநிலம் | பாரம்பரியக் கட்டிடங்களைப் பாதுகாக்க 5.25 இலட்சம் இன்டாக் நிறுவனத்திற்கு மானியமாக வழங்கப்படும். புதுச்சேரியில் தனித்தன்மை வாய்ந்த கட்டிடக்கலைப் பாரம்பரியத்தின் பாதுகாக்க கலை, பண்பாட்டுப் பாரம்பரியத்திற்கான சர்வதேச அறக்கட்டளையின் புதுச்சேரி பிரிவு, புதுச்சேரியில் தனித்தன்னை வாய்ந்த கட்டிடக்கலை பாரம்பரியத்தைப் பாதுகாக்க தீவிரமாகச் செயல்படுகிறது. இன்டாக் நிறுவனத்திற்கு மானிய உதவி அளிக்கப்படுகிறது. | | நிதி உதவி |
| 5. | புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் / நூலக ஆவணக் காப்பக விரிவாக்கம் மற்றும் மேம்பாடு மற்றும் அட்டவணை இனத்தவர் சிறப்புத் திட்டம் (ளுஊளூ) | மாநிலம் | ஆவணங்களைப் பாதுகாப்பது தொடர்பாக எல்லாத்துறைகளுக்கும் அரசு நிறுவனங்களுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அவர்கள் பயன்பெற ஆவணங்களைப் பாதுகாப்பது பற்றி தேவையான ஆவண வழிகாட்டி நெறிகளை அளித்தல்.<br><br>புதிய கிளை நூலகங்கள், படிப்பகங்களைத் திறப்பதன் மூலம் பொதுமக்களிடையே படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துவதோடு, அனைத்துப் பகுதிகளில் தற்போதுள்ள நூலகங்களை மேம்படுத்துதல். | வாசகர்கள் | |

| வ. எண் | திட்டங்களின் பெயர் | மத்திய மாநில | திட்டங்களின் விவரம் | இலக்கு பிரிவு | அளிக்கப்படும் பயன்பாடு |
|---|---|---|---|---|---|
| 6. | இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளைக்குப் பங்களிப்பு | மாநிலம் | இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை நூலயங்களில் மேம்பாட்டுக்காக வழங்கும் மானியத்திற்கு இணையாக மானியம் வழங்கப்படும்.<br><br>புத்தகம் வாங்க, காணினி, மரச்சாமான்கள், தட்டச்சுப்பொறி இவை ரோமன் ரோலண்டு நூலகம், யூனியன் பிரதேசத்தில் உள்ள அனைத்து பொது மற்றும் கிளை நூலகங்களுக்கு வாங்க புதுவை அரசு வழங்கும் மானியத்திற்கு இணையாக ஒவ்வோராண்டும் கொல்கத்தாவில் உள்ள ராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை மானியம் வழங்குகிறது. | ----- | |
| 7. | அருங்காட்சியகம் / ஆய்வுமையம் மேம்பாடு | மாநிலம் | • பாரதிதாசன்<br>• பாரதியார்<br>• சுப்பையா – சரசுவதி சுப்பையா<br>ஆகியோரின் பிறந்த மற்றும் இறந்த நாள் கொண்டாடுதல் இருக்கும் அருங்காட்சியகங்களை மேம்படுத்த புதிய அருங்காட்சியகங்கள் அமைத்தல் - அகழ்வாராய்ச்சி பொருள்கள் தொல்லியல் பொருள்கள் இவற்றைத் திரட்டிப் பாதுகாத்தல் - அருங்காட்சியகத்தில் கல்விப்பணிகளை மேற்கொண்டு நேரு அறிவியல் நடுவத்தை முழுமையான அறிவியல் மையமாக மாற்றுதல்.<br><br>பாரதியார், பாரதிதாசன் நினைவாக முனைவர் பட்டத்திற்கான ஆய்வு நிதியுதவி வழங்குதல். | ஆராய்ச்சியாளர்கள் | ஆராய்ச்சியாளர்கள் /கலைஞர்கள் |
| 8. | பண்பாட்டு நடவடிக்கைகள் நிறுவுதல் / மேம்படுத்துதல் தன்னார்வல தொண்டு நிறுவனங்களுக்கு / அட்டவணை இனத்தவர் சிறப்பு நிதியுதவி திட்டத்தின் கீழ் மானிய உதவி அளித்தல் | மாநிலம் | திறந்த வெளியில் பாரம்பரிய கலைகளை நிகழ்த்தும் கலைஞர்கள் ஆடும் பொம்மலாட்டம் / தெருக்கூத்து / கரகாட்டம் / காவடியாட்டம் களரிபைட் ஆட்டம் / சிலம்பம் ஆகிய கலைகள் அழியும் நிலையில் உள்ளதால் ஒவ்வொரு குழுவுக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ரூ. 3,500 நிதியுதவி அளிக்கப்படும்.<br><br>நம் நாட்டின் பல்வேறு வகையான செவ்வியல் / நாட்டுப்புற கலை வடிவங்களைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தவும் மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்துதல் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உள்ளூர் கலைஞர்கள் மற்றும் பிற மாநிலக் கலைஞர்களைக் கொண்டு பிற மாநிலம் / நாடுகளுக்கு கலைஞர்களை அனுப்புவதோடு விருதுகள் / பட்டங்களை பெற்ற புகழ் பெற்ற கலைஞர்களையும் பிற மாநிலம் / நாடுகளுக்கு அனுப்பி கலாச்சார பாரம்பரியத்தை பல்வேறு கலை நிகழ்ச்சிகளை நடத்துதல் மூலம் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.<br><br>பழமையான பாரம்பரிய கலைகளை கலைக்குழுக்கள் கலைஞர்களை ஊக்கப்படுத்துவதே இதன் நோக்கமாகும். | தன்னார்வல நலிவுற்ற கலைஞர்கள் | நிதி உதவி |

## இயல் 6

# ரோமன் ரோலண்டு நூலகம் மற்றும் கிளை நூலகங்களின் செயல்பாடுகள்

**புதுச்சேரி பகுதியில் நான்கு பொது நூலகங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:**

1. ரோமன் ரோலண்டு நூலகம், புதுச்சேரி.
2. டாக்டர் எஸ்.ஆர். ரங்கநாதன் பொது நூலகம், காரைக்கால்.
3. பொது நூலகம், மாஹே.
4. பொது நூலகம், ஏனாம்.

புதுச்சேரி பகுதியில் 54 கிளை நூலகங்களும், காரைக்கால் பகுதியில் 18 கிளை நூலகங்களும், மாஹே பகுதியில் 3 கிளை நூலகங்களும், ஏனாம் பகுதியில் 2 கிளை நூலகங்களும் உள்ளன.

**நூலகங்களில் உறுப்பினராதல் :**

நூலகங்களில் உள்ள இடத்தில் உள்ள வாசகர் அல்லது பயனாளர் நூலகத்தில் சேருவதற்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து புதுச்சேரி அரசு அதிகாரிகளிடம் கையொப்பம் பெற்று அந்தப் பகுதியில் வசிப்பதற்கான சான்றுகளுடன் விண்ணப்பப்படிவத்தினை நூலகரிடம் அளிக்க வேண்டும். ரோமன் ரோலண்டு நூலகமானது யூனியன் பிரதேசத்தில் உள்ள பொது நூலகமாகும். தென்னிந்திய மொழிகள் மட்டுமல்லாது ஆங்கிலம் மற்றும் இந்தியில் உள்ளிட்ட மொழிகளில் உள்ள நூல்களையும் இதழ்களையும் வழங்குகிறது.

ரோமன் ரோலண்டு நூலகத்தின் வேலை நேரம் : செவ்வாய் முதல் ஞாயிறு வரை காலை 8.00 மணிமுதல் இரவு 8.00 மணிவரை. திங்கள் வார விடுமுறை.

விண்ணப்பதாரர் பழைய உறுப்பினரா? அல்லது புதிய உறுப்பினரா? என்பதை நூலகர் சரிபார்த்து அதனை உறுதி செய்வார்.

சரிபார்க்கப்பட்ட பின்னர் விண்ணப்பதாரர் நுழைவுக் கட்டணத்தைச் செலுத்தி நூலகரிடமிருந்து உடனடியாக இரண்டு அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

உறுப்பனர் கட்டணம் :

ரூ. 25.:.- (ரூபாய் இருபத்தைந்து மட்டும்) பிணையத் தொகையாகப் பெறப்பட்டு.

1. புதுச்சேரி ரோமன் ரோலண்டு நூலகம்.
2. காரைக்கால். டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் பொது நூலகம்.
3. மாஹே - பொது நூலகம்.
4. ஏனாம் - பொது நூலகம்.

மேற்கூறப்பட்ட பிணையத் தொகையுடன் (திருப்பி செலுத்தப்படாத தொகை) புதுப்பிக்கப்படும் கட்டணம் / வருடாந்திரக் கட்டணம் ரூ. 5/- (ரூபாய் ஐந்து மட்டும்) வசூலிக்கப்படும்.

## நூலகச் செயல்பாடு :

### பருவ இதழ்ப் பிரிவு

வாசகர்கள் நூலகத்திலுள்ள செய்தித்தாள்கள், பருவ இதழ்கள் / இதழ்கள் போன்றவற்றைப் படிக்கலாம்.

### நூல்கள் வழங்குதல் :

காப்பீட்டுத் தொகையாக ரூ. 25/- ம் புதுப்பிப்புத் தொகையாக ரூ. 5/- ம் செலுத்திய பின்னர் வாசகர்களால் நூல்கள் எடுத்துச் செல்லப்படும்.

கிளை நூலகங்களில் உறுப்பினர் காப்பீட்டுத் தொகையாக ரூ. 10/- ம் புதுப்பிப்புத் தொகையாக ரூ. 5/- ம் செலுத்த வேண்டும்.

### மேற்கோள்பிரிவு :

விலையுயர்ந்த மற்றும் அரிய நூல்களில் அனைத்தும் பல்வேறு வகைகளில் சேகரிக்கப்பட்டு, நூலகத்தின் உள்ளே படிப்பதற்கு ஏற்ற வகையில் வைக்கப்பட்டுள்ளது.

### நகல் பிரிவு :

நூலகத்தில் உள்ள நகல் பிரிவில் வாசகர்கள் தாங்கள் படித்த படைப்புகளில் இருந்து நகல் எடுத்துக் கொள்ளலாம்.

### இந்திய ஆட்சிப் பணித்தேர்வு தயாரிப்பு பிரிவு :

பொது நூலகங்களில் தகுதித் தேர்வுகளான இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல்பணி நுழைவுத் தேர்வுகளுக்கு தேவையானவற்றை தயாரிக்கவும், எழுதுவதற்கும் தேவையான தனிப்பிரிவு இயங்குகிறது.



## கிளை நூலங்களில் உறுப்பினர்கள் நடைமுறைகள்:

உறுப்பினருக்கான இரண்டு அட்டைகளின் கீழ் இரண்டு புத்தகங்கள் பெற ரூ. 10/- திருப்பித் தரக்கூடிய காப்பு வைப்புத் தொகையாக வசூலிக்கப்படும். ஆண்டு உறுப்பினர் புதுப்பிக்கும் போது ரூ. 5/- புதுப்பிக்கும் கட்டணமாக வசூலிக்கப்படும் (திருப்பித்தரப்படமாட்டாது)

ஒவ்வோராண்டும் புத்தகம் கடன்தருவோர் அட்டை அந்தக் குறிப்பிடப்பகுதியில் வாழ்வதற்கான ஆதாரத்தை அளித்து உரிய கட்டணத்தை உறுப்பினர் செலுத்தினால் புதுப்பிக்கப்படும்.

நூலகம் இருக்குமிடத்தில் வசிப்பவர் அந்த நூலகத்தில் உறுப்பினராகலாம். கிளை நூலகத்தில் உறுப்பினராக உள்ளவர்கள் உரிய கட்டணம் செலுத்தினால் வட்டார நூலகத்தில் உறுப்பினர் ஆகலாம்.

புதுவை மக்களின் தேவை மற்றும் அவசியம் கருதி நான்கு பகுதிகளிலும், கிராமங்களிலும் நகர்ப்புறப் பகுதிகளிலும் கிளை நூலகங்கள் இன்னும் திறக்கப்பட வேண்டி உள்ளன. கொம்யூன் தலைமையிடத்தில் உள்ள நூலகங்கள் நூலகங்களை விட மேல் நிலைக்கு உயர்த்தப்படும்.

வாடகைக் கட்டணத்தில் இயங்கிவரும் நூலகங்கள் அரசுக் கட்டிடத்திற்கு மாற்றப்படும். புதிய கிளை நூலகங்களுக்குச் சொந்தக் கட்டிடம் கட்ட அரசு நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

# இயல் 7

## அருங்காட்சியகங்கள்

1. புதுச்சேரி அருங்காட்சியம்
2. ஜவகர் பொம்மைக் காட்சியகம்
3. மகாகவி பாரதியார் நினைவு அருங்காட்சியம், மற்றும் ஆய்வு மையம்
4. பாவேந்தர் பாரதிதாசன் நினைவு அருங்காட்சியகம் மற்றும் ஆய்வு மையம்

இந்த அருங்காட்சியகங்கள் பொதுமக்களுக்காக செவ்வாய் முதல் ஞாயிறு வரை (காலை 9.40 முதல் 1 மணி மற்றும் பிற்பகம் 2.00 – 5.20 மணிவரை) திறந்து வைக்கப்பட்டிருக்கும். திங்கள் கிழமை வார விடுமுறை.

**மக்கள் தலைவர் திரு. வ. சுப்பையா – திருமதி சரசுவதி சுப்பையா நினைவு சமூக விஞ்ஞான இலக்கிய ஆய்வுமையம் - நூலகம்**

வெள்ளாழர் வீதியில் இயங்கும்,

மக்கள் தலைவர் மக்கள் தலைவர் திரு. வ. சுப்பையா – திருமதி சரசுவதி சுப்பையா நினைவு சமூக விஞ்ஞான இலக்கிய ஆய்வுமையம் மற்றும் நூலகம் செவ்வாய் முதல் ஞாயிறு வரை (காலை – 9.40 முதல் நண்பகல் 1 மணி மற்றும் பிற்பகம் 2.00 – 5.20 மணிவரை) திறந்து வைக்கப்பட்டிருக்கும்.

திங்கள்கிழமை வார விடுமுறை. திரு. வ. சுப்பையா அவர்களின் வாழ்க்கை குறித்த நிழற்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

# இயல் 8

## கிளை நூலகர்களின் பட்டியல்

## புதுச்சேரி பகுதியில் உள்ள அரசு கிளை நூலகங்கள்

| எண் | இடம் | அஞ்சலகக் குறியீடு |
|---|---|---|
| 1 | அபிசேகப்பாக்கம் | 605 007 |
| 2 | ஆலங்குப்பம் | 605 111 |
| 3 | அரியாங்குப்பம் | 605 007 |
| 4 | அரியூர் | 605 102 |
| 5 | பாகூர் | 607 402 |
| 6 | செட்டிப்பட்டு | 605 501 |
| 7 | ஏம்பலம் | 605 106 |
| 8 | ஏரிப்பாக்கம் | 605 106 |
| 9 | காலாப்பட்டு | 605 014 |
| 10 | கலிதீர்த்தான் குப்பம் | 605 607 |
| 11 | கல்மண்டபம் | 605 016 |
| 12 | கரையாம்புத்தூர் | 605 106 |
| 13 | கரிக்கலாம்பக்கம் | 605 007 |
| 14 | கிருமாம்பக்கம் | 607 402 |
| 15 | கீழுர் | 605 106 |
| 16 | கூடப்பாக்கம் | 605 501 |
| 17 | குப்பம் | 605 507 |
| 18 | குருவினத்தம் | 607 402 |
| 19 | குயவர் பாளையம் | 605 013 |
| 20 | இலாசுப்பேட்டை | 605 008 |
| 21 | மடுகரை | 605 106 |
| 22 | மணப்பட்டு | 607 402 |
| 23 | மேல்பரிக்கல்பட்டு | 607 402 |
| 24 | முதலியார்பேட்டை | 605 004 |
| 25 | முருங்கப்பாக்கம் | 605 004 |
| 26 | முத்தியால்பேட்டை | 605 003 |
| 27 | முத்தரையர்பாளையம் | 605 009 |
| 28 | நல்லவாடு | 605 007 |
| 29 | நேதாஜி நகர் | 605 001 |
| 30 | நெட்டப்பாக்கம் | 605 106 |
| 31 | பாக்குமுடையான்பட்டு | 605 008 |
| 32 | பன்னித்திட்டு | 607 402 |
| 33 | பெரிய வீராம்பட்டினம் | 605 007 |
| 34 | பிள்ளையார்குப்பம் | 605 502 |
| 35 | பிச்சவீரம்பட்டு | 605 010 |
| 36 | பூரணாங்குப்பம் | 605 007 |
| 37 | ரெட்டியார்பாளையம் | 605 010 |
| 38 | சேதராப்பட்டு | 605 101 |
| 39 | சேலியமேடு | 607 402 |
| 40 | செல்லிப்பட்டு | 605 501 |
| 41 | சண்முகாபுரம் | 605 009 |
| 42 | சிவராந்தகம் (மணக்குப்பம்) | 605 106 |
| 43 | சோரப்பட்டு | 605 501 |
| 44 | சுத்துக்கேணி | 605 501 |
| 45 | டி.என். பாளையம் | 605 007 |
| 46 | தேங்காய்த்திட்டு | 605 004 |
| 47 | திருபுவனை | 605 107 |
| 48 | திருக்காஞ்சி | 605 110 |
| 49 | திருக்கனூர் | 605 501 |
| 50 | திருவாண்டார் கோயில் | 605 102 |
| 51 | தொண்டைமானந்தம் | 605 502 |
| 52 | உறுவையாறு | 605 110 |
| 53 | வீமக்கவுண்டர்பாளையம் | 605 009 |
| 54 | வில்லியனூர் | 605 110 |
| 55 | ரோமன் ரோலண்டு நூலகம் | 605 001 |

## காரைக்கால் பகுதியில் உள்ள நூலகங்கள்

| எண் | இடம் | அஞ்சலகக் குறியீடு |
|---|---|---|
| 1 | அக்கரைவட்டம் | 609 602 |
| 2 | அம்பகரத்தூர் | 609 601 |
| 3 | காரைக்கால்(பொது நூலகம்) | 609 602 |
| 4 | காரைக்கால் மேடு | 609 605 |
| 5 | கோட்டுச்சேரி | 609 609 |
| 6 | குரும்பகரம் | 609 603 |
| 7 | மேலையூர் | 609 607 |
| 8 | நல்லம்பாள் | 609 601 |
| 9 | நெடுங்காடு | 609 603 |
| 10 | நேருநகர் | 609 605 |
| 11 | நிரவி | 609 604 |
| 12 | ஒழியப்பத்து | 609 604 |
| 13 | பூவம் | 609 609 |
| 14 | செல்லூர் | 609 607 |
| 15 | சேத்தூர் | 609 601 |
| 16 | சுரக்குடி | 609 607 |
| 17 | டி.ஆர். பட்டினம் | 609 606 |
| 18 | திருநள்ளாறு | 609 607 |
| 19 | விழுதியூர் | 609 607 |

## ஏனாம் பகுதியில் உள்ள நூலகங்கள்

| எண் | இடம் | அஞ்சலகக் குறியீடு |
|---|---|---|
| 1 | தரியாலிதிப்பா | 533 464 |
| 2 | கனகலாபட் | 533 464 |
| 3 | ஏனாம் | 533 464 |

## மாஹே பகுதியில் உள்ள நூலகங்கள்

| எண் | இடம் | அஞ்சலகக் குறியீடு |
|---|---|---|
| 1 | சாலக்கரா | 673 310 |
| 2 | மாஹே | 673 310 |
| 3 | பள்ளூர் | 679 539 |
| 4 | பந்தக்கல் | 673 310 |

# இயல் 9

2005 ஆம் ஆண்டின் தகவல் உரிமைக் சட்டத்தின்படி நியமிக்கப்பட்ட அலுவலர்களின் பெயர், பதவி மற்றும் பிற குறிப்புகள் :

## பொதுமக்கள் தகவல் அதிகாரி

| | |
|---|---|
| திருமதி. வே. கனி<br>கண்காணிப்பாளர்,<br>கலை, பண்பாட்டு துறை,<br>புதுச்சேரி. | முகவரி<br>1, ரோமன் ரோலண்டு வீதி,<br>புதுச்சேரி – 605 001.<br>தொலைப்பேசி எண். 0143-2336203 |

## முதல் மேல் முறையீட்டு அதிகாரி

| | |
|---|---|
| திரு. சு. கனகராஜ்,<br>இயக்குநர்,<br>கலை, பண்பாட்டு துறை,<br>புதுச்சேரி. | முகவரி<br>1, ரோமன் ரோலண்டு வீதி,<br>புதுச்சேரி – 605 001.<br>தொலைப்பேசி எண். 0143-2336203 |